- இத்தனை வருங்களாக, எல்லாவற்றிக்கும் பின்பாக வேலை செய்து, பொல்லாத அரசியை ஜெயம்கொள்ள உதவிடும் உறவுமுறைகளை யோய்தா பெலப்படுத்தினான்.
- குறிப்பிட்ட நேரத்தில் எருசலேமில், ஆசாரியர்களையும், வம்சத் தலைவர்களையும் ஒன்று கூட்டுவதே யோய்தாவின் இரகசியக் குழுவின் முக்கிய கனவாகும்.
- யோய்தா தனக்கு நன்கு தெரிந்த லேவியர்களை மட்டும் ஆள்சேர்ப்பில் சேர்த்துக்கொள்வதை காணலாம்.

- அவர்கள் அனைவரும் எருசலேமில் வந்தடையும்பொழுது யோய்தா தன்னுடைய மிகப்பெரிய திட்டத்தை வெளிப்படுத்துகிறான்.
- யோவாசை முன்நிறுத்தி அவர்களிடம் ஓட்டளிக்க அனுமதிக்கவில்லை.
- அவர்களோடு உடன்படிக்கை செய்த பின்னரே, அவர்களின் பொதுவான பிரச்சனைக்கு தீர்வு அளிக்கிறான். ஏழு வயது நிரம்பிய யோவாஸ் அவர்களுடைய தீர்வாக இருந்தான்.
- குழுவாக செயல்படாமல் தேவனுடைய இராஜ்ஜியம் வளராது. .
- குழுவோடு செயல்படுவதற்கே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். (1கொரி 12)
- நான் குழுவில் செயல்படுகிறேனா?
- அல்லது பார்வையாளராக கடந்து செல்கிறேனா?
- உதவி செய்து என்னுடைய கரங்கள் கறைபடிவதை விரும்புகிறேனா அல்லது எதிர்த்தும் விமர்சித்துக்கொண்டும் இருக்கிறேனா?

**<u>3 ) தேவனிடத்தில் திரும்ப ஒரு அழைப்பு</u>** (2 நாளாகமம் 23:16-21)
- கர்த்தருடைய ஜனமாயிருக்கும்படிக்கு, தானும் சகல ஜனங்களோடும் இராஜாவோடும் உடனபடிக்கை பண்ணிக்கொண்டான்.
யோய்தாவைப் போல நாம் நம்மை முதலில் தேவனிடத்திற்கு திரும்பவும், நம்முடைய குடும்பங்கள் தேவ ஜனங்களாயிருக்கவும், இவ்வுலகமானது தேவ ஜனங்களாயிருக்கும்படி அழைப்பு விடுக்க வேண்டும்.

- நாம் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும் போது, இயேசுவே ஆண்டவர் என்ற உடன்படிக்கையை எடுத்தோம்.
இன்றும் உங்கள் வாழ்விலும், நேரத்திலும், தாளந்துகளிலும், பணத்திலும் இயேசுவே ஆண்டவராக இருக்கிறாரா?
- பிறரிடம் பகிர்ந்து கொள்ள உற்சாகமடையும் அதே ஆண்டவராக இன்னும் அவர் இருக்கிறாரா?
- கடைசியாக எப்போது ஒருவருக்கு உதவி செய்து இயேசு கிறிஸ்துவின் சீராக மாற்றினீர்கள் ?

**<u>சவால் :</u>**
இயேசுப்பற்றி தினமும் ஒருவரிடமாவது பகிர்ந்துகொள்ள முடிவெடுங்கள்.



# <u>1. பெசலெயேல் (ஜெர்ரி உத்தாங்கி)</u>

<u>யாத்திராகமம் 35 : 30 - 36:5</u>

<u>தேவனை மகிமைப்படுத்தும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம்.</u>
வசனம் 30-33-ல் வாசிக்கும்போது, பெசலெயேல் எனப்பட்ட மனுன் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவனும், அவனுக்கு ஞானத்தையும், புத்தியையும், அறிவையும் அருளி, தேவன் தேவ ஆவியினாலே அவனை நிரப்பினார்.
நாமும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும், அவர் முன்னதாக நற்கிரியைகளை நாம் செய்யும்படி நம்மை ஆயத்தம் செய்தவரும் (எபே 2 : 10) தம் கரங்களினால் இவ்வுலத் தோற்றத்திற்கு முன்னே நம்மை தெரிந்து கொண்டிருக்கிறார். ( எபே 1: 4)

<u>நம்முடைய அழைப்பை நாம் சந்தேகிக்கிறோமா?</u>
நாம் தேவனால் தெரிந்து கொண்டவர்களல்ல என்றும் நாம் பயனற்றவர்கள், எதிலும் சிறந்தவர்களல்ல என்ற உணர்வும் அநேக நேரங்களில் உங்களுக்குள் தோன்றும். ஆனால், வேதவசனங்கள் என்ன கூறுகின்றதென்றால், இன்று நீங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் இருந்தால், தேவனால் விசேமாக தெரிந்துகொள்ளப்பட்டதினாலேயே நீங்கள் இருக்கிறீர்கள். தேவனால் தெரிந்து கொண்டு, கிறிஸ்துவினால் சுத்தம் செய்யப்பட்ட பிறகு, தேவ ஆவியினால் நிரப்பப்பட்டவர்களாயும் இருக்கிறீர்கள். தேவ மகிமைக்கும் சபையைக்கட்டுவதற்கும் நம்முடைய தாளந்துகளை பயன்படுத்த தேவ ஆவியானவர் உதவிடுவார். 1கொரி 12 7-11, ரோமர் 12: 6-8, 1 பேதுரு 4:10-11 வாசிக்கவும்.

**பிறருக்கு எடுத்துச் செல்லவும்...**
வசனம் 34- ல் தேவனானவர், பெசலேயேல் மற்றும் அகோலியாபின் இருதயத்தில் பிறருக்கு போதிக்கும் வரத்தை அருளினார் என கூறுகிறது. தங்களுடைய திறனையும் அனுபவத்தையும் பிறருக்கு கொடுத்து, தேவ ஊழியத்தில் பிறர் தேர்ச்சிபெறவும் வேண்டும் என்பது மிகமுக்கியம் என தேவன் எண்ணினார்.
இதனை செய்வதற்கு இன்று நீங்கள் அழைக்கப்படவில்லையா? எத்தகைய திறனை தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கிறார்..! பாடல் பாடுவது, பணிவிடை செய்வது , குழந்தைகளுக்கும், இளம் வயதினருக்கும், மாணவர்களுக்கும் போதிப்பது, பிரசங்கம் செய்வது, வேதாகமம் கற்பிப்பது பாடங்களை தயார் செய்வது, மொழி பெயர்ப்பு செய்வது , புதிய கற்பனைதிறன் மற்றும் ஓவிய திறமை, சமையல், உற்சாகப்படுத்துதல், நிர்வாக பொறுப்பு, நிகழ்ச்சிகளை திட்டமிடுவது...
இவற்றினை தேவஇராஜ்ஜியத்தில் பயன்படுத்துகிறீர்களா? மற்றவர்களையும் அழைத்து, போதித்து பயிற்சியளிக்கிறீர்களா?

**நம்பகமான, பொறுப்புள்ள வேலையாட்கள்:**
யாத்திராகமம் 38: 22-23 ல் பெசலேயேலும் அகோலியாபும் கர்த்தர் மோசேக்குக் கற்பித்ததை எல்லாம் செய்தார்கள் என்று, வாசிக்கிறோம். யாத்திராகமம் 35: 4-5ல் மோசேக்கு தேவையான பொருட்கள் என்னவென்பதையும், வேலையின் முன்னேற்றத்தைக் குறித்த அறிக்கை செய்வதையும் பார்க்கிறோம்.
தேவனுடைய ஊழியத்தில் நீங்கள் நம்பகமானவர்களா? தேவகாரியம் மென்மையாக செயல்பட உங்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுரைகளை உண்மையோடும், தெளிவாக தொடர்ச்சியாகவும் செயல்படுத்துகிறீர்களா?

**பயன்பாடு:**
1. உங்களை தெரிந்துகொண்டதற்காக தேவனிடத்தில் நன்றிகூறி உங்களின் மனம்திரும்புதலின் சாட்சியை நினைவுகூறி, தேவன் ஆயத்தப்டுத்தின அதிசய வழியை குறித்து ஜெபியுங்கள்.

2. உங்களுடைய கிறிஸ்தவ வாழ்வில் தேவ ஆவியின் வரத்தைக் கண்டறிந்து, தேவன் இன்னும் அதிகமாய் உங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று எழுதவும். நீங்கள் எவ்விதத்தில் இன்னும் அதிக நம்பகமானவராயிருக்க முடியும்.?

3. ஜெபித்து பிறருடன் பேசி, நீங்கள் கற்றதை பிறர் கற்றுக் கொள்ள யாராவது ஒருவரிடம் நேரம் செலவழிக்க நியமித்துக் கொள்ளுங்கள்.

## 2. பினெகாஸ்

**பின்னனி:**
பினெகாஸ் என்பவன் ஆரோனின் பேரனும், எலெயாசாரின் குமாரனும் ஆவான். இஸ்ரவேலர்கள் அனைவரும் எகிப்தியர்களின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடைந்து, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்கு போனார்கள். தேவனுடைய கரம் இஸ்ரவேலர் மீது இருந்தபடியினால் அவர்கள் கடந்து சென்ற அனைத்து தேசங்களும் பயத்தினால் நிரம்பியிருந்தார்கள். மோவாப் தேசமும் அதில் ஒன்று. மோவாபின் இராஜாவாகிய பாலாக்., பிலேயாமை அழைத்து இஸ்ரவேலை சபிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். ஆனால், பிலேயாம் இஸ்ரவேலை சபிக்க வாய்திறக்கும் போதெல்லாம், அவர்களை ஆசீர்வதித்தான். ஆதலால பாகால் வழிபாட்டின் மூலம் இஸ்ரவேலரை வஞ்சிக்க வேண்டும் என்று பிலேயாம் மோவாபிடம் கூறினான். மிக அழகான ஸ்திரிகளை இஸ்ரவேலரிடம் அனுப்பி, வேசித்தனத்திலும், விக்கிரக ஆராதனையிலும் செயல்படும்படி பிலேயாம் ஆலோசனைக் கூறினான். இந்த ஆலோசனை வெற்றிபெற்று, அநேக இஸ்ரவேலர்கள் வேசித்தனம் பண்ணத் தொடங்கினார்கள்.

**வசனத்தை வாசித்தல்:**
மோவாபினரால் வஞ்சிக்கப்பட்டு, இஸ்ரவேலர்கள் பின்வரும் பாவங்களை செய்தார்கள். வேசித்தனத்தில் விழுந்தார்கள். சிலை வழிபாட்டின் பலிகளில் கலந்து கொண்டார்கள். பலிகளின் விருந்தை புசித்தார்கள். அவர்களின் தேவர்களை பணிந்து கொண்டார்கள். இஸ்ரவேலர்கள் பாகால்பேயோரைப் பற்றிக் கொண்டார்கள். கர்த்தருடைய கோபம் இஸ்ரவேலர் மீது மூண்டது.

**விளைவு:**
அந்நாளில் வந்த வாதையால் இஸ்ரவேலர்கள் 24000 பேர்கள் மறித்தார்கள். நம்மில் யாராவது இந்த கேள்வியை கேட்கலாம், "அன்பான தேவன் ஏன் கோபத்துடன் நடந்து கொண்டார் என்று''? இதனை தனிப்பட்ட முறையில் படித்தறிய வேண்டும். வேதாகமத்தில் காணப்படும் அன்பானது, பொல்லாங்கை வெறுக்காத அன்பாயிருந்தால், அது அன்பே கிடையாது. மிகப்பெரிய தேவ அன்பில், சிறிதளவு தேவ கோபாக்கினையின் கட்டுரை இணைத்து இருந்திருக்கலாம் என்று ஒருவர் கூறினார்.
தேவன், பாவத்தை செய்த இஸ்ரவேலின் தலைவர் எல்லாரையும்



யோராமின் மருமகனுமாவான். யோய்தா இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டான். யோவாசை அடைக்கலம் செய்வது தேசத்துரோக செயல் என்பதை அறிந்திருந்தான். இருப்பினும், தேவனுடைய ஆசாரியனாக, தேவனுடைய சட்டத்திற்கும் சித்தத்திற்கும் அடிபணிந்தான். யோய்தா, யோவாசை தேவாலயத்தில் வளரச் செய்து, யாருடைய பார்வைக்கும் அறியாதபடிக்கு வளர்த்தான். யோய்தாவின் இந்த வயதில் ஒரு பிள்ளையை வளர்ப்பதைக் காட்டிலும் அச்செயலில் உள்ள ஆபத்தே முக்கியமானதாகும் அத்தாலியாள் அத்தேசத்தின் முழுகட்டுப்பாட்டையும் வைத்திருந்தாள். ஒரு வேளை அத்தாலியாள், யோவாஸ் எங்கு இருக்கிறான் என்று கண்டறிந்தால், யோய்தாவும் கொல்லப்படுவான்.

**1. ஆபத்தைத் தேடு**: (2 நாளாகமம் 22 - 10-12)

- யோய்தா, சரியான காரியத்தை செய்வதற்குத் தன் உயிரையும் பணய வைத்தான்.
- நமக்கு ஏதாவது தனிப்பட்ட லாபம் இருந்தால் மட்டுமே நாம் ஆபத்தானதை முயற்சிக்கிறோம்.
- எனினும், சரியானதைச் செய்ய நீங்கள் ஆபத்தானதை முயற்சிப்பீர்களா?
- தேவனுடைய வார்த்தையை கீழ்ப்படிவதற்காக கடைசியாக எப்பொழுது நான் ஆபத்தான காரியத்தில் முயற்சியெடுத்தேன்?
- உங்களுடைய உறவுமுறை பாதித்தாலும், பிறருடைய பாவத்தை எப்போது கடைசியாக கடிந்து கொண்டீர்கள்.
- நம்முடைய வேளையோ உறவுமுறையோ, எதிர்கால பாதுகாப்பின்மையோ அல்லது நம்முடைய பிள்ளைகளுடைய எதிர்காலமோ பாதிக்கும் என்பதை அறிந்து தேவனுடைய தரத்தை சமரசம் செய்திருக்கிறீர்களா?

- இயேசுவின் சீராக மாறுவதற்கு ஆபத்தான முயற்சிகளை முடிவெடுத்தோம். இப்போது உங்களை நிறுத்துவது எது?
- தோற்றுவிடுவோம் என்கிற பயம்தான் இன்று நாம் ஆபத்தான முயற்சிகளை எடுக்காமல் இருக்க காரணமாகும்.

இந்திய படையில் உள்ள கோர்க்கா ரிஃபில் என்பவர் கூறிய இந்த வார்த்தைகளை நான் நேசிக்கிறேன்.

" சில இலக்குகள் மிக உயர்ந்தவை
அதில் தோற்பது மகிமையே.."

**சவால்:**
ஆபத்தானதை முயற்சிப்போம். சவால் தரக்கூடிய சிலக் காரியத்தை செய்யுங்கள். வேதாகம கலந்துரையாடலை நடத்துங்கள். புதிய பகுதியில் குடும்பசபையை தொடங்குங்கள், உங்களை மிரட்டுபவர்களை சபைக்கு அழையுங்கள், சுவிசேக் குழுவில் செல்லுங்கள். தேவனுக்கு ஊழியம் செய்ய ஓராண்டு சவாளைத் தேர்ந்தெடுங்கள், கர்த்தருக்கென்று ஏதாவது செய்யுங்கள், ஆபத்தானதை முயற்சியுங்கள். எல்லாம் சிறப்பாக நடக்கும் என்று ஒரே இடத்தில் அமர்ந்து விடாதீர்கள்.

**2.ஒரு அணியை உருவாக்குங்கள்:** 2 நாளாகமம் 23 : 1-15

- யோவாசை இராஜாவாக்கும் யோய்தாவின் திட்டத்திற்கு ஒரு அணி தேவைப்பட்டது.
-ஆறு வருகாலமாய் யோய்தா அமைதலாயிருந்தான்.
- ஆறு வருமாய் யோவாஸ் ஆலயத்தில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது ஒரு சிலருக்கு மட்டுமே தெரியும்.

உதவியாய் இருக்கும்.

கேள்வி : 2 சாமுவேல் 4 : 4 கின் படி
மேவிபோசேத் என்பவர் யார்?

கேள்வி : சவுலும் தன் தகப்பனாகிய யோனத்தானும் கொல்லப்பட்ட பின்பு தன்னுடைய தாதியினால் காப்பாற்றுவதற்கு முயன்று தாங்கிச் சென்று ஓடும்போது மேவிபோசேத்துக்கு என்ன நடந்தது?

கேள்வி : இச்சம்பவம் நடக்கும்போது மேவிபோசேத்துக்கு வயது என்ன?

கேள்வி : இஸ்ரவேலின் புதிய இராஜாவாக தாவீதை உயர்த்தி, தேவன் தம்முடைய சத்தியத்தை நிறைவேற்றிய பின்பு தாவீதின் இருதயத்தில் இருந்த ஒரு முக்கிய காரியம் என்ன? (2 சாமு 9 : 1-5)

கேள்வி : இராஜாவின் பேரனான மேவிபோசேத், தாவீதின் சிங்காசனத்திற்கு ஒரு அச்சுறுத்தலாக இருந்திருக்கலாம். எதினும், தாவீது மேவிபோசேத்துக்கு செய்ய நினைத்தது என்ன? ( 2 சாமு 9 :6-11 )

கேள்வி : 2 சாம 9 :8 ன் படி மேவிபோசேத் தன்னைக் குறித்து எவ்வாறு எண்ணினான்? இப்படி நினைப்பதற்கான காரண்ம் என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

கேள்வி : 2 சாமு 9:11 தாவீது மேவிபோசேத்தை எவ்வாறு பார்த்தான் அல்லது உணர்ந்தான்?
எபேசியர் 2:1-6 வரை வாசித்து, இக்கதையானது நம்மடைய கதையோடு எவ்வாறு ஒத்துப்போகிறது என்றும், நாம் பாவிகளாயும் உதவியற்றவர்களாயும் இருக்கும் போது தேவன் எவ்வாறு நம்மிடம் வந்தடைந்தார் என்றும் பிரதிபலியுங்கள்.

கேள்வி : வசனம் 1:3ன்படி நம்முடைய நிலைமை எவ்வாறு உள்ளது? இப்படித்தான் நீங்கள் உங்களை காண்கிறீர்களா? இது ஏன் முக்கியம்?

கேள்வி : வசனம் 4 - தேவனை எவ்வாறு விளக்குகிறது.?

கேள்வி : வசனம் 6ன்படி, தேவன் நமக்கு என்ன செய்திருக்கிறார்.? எத்தனைமுறை இதனை நினைத்து தேவனுக்கு நன்றி கூறியிருக்கிறீர்கள்?

தேவன் யார் என்பதையும், அவர் நமக்கு செய்ததையும் நம்முடைய தற்சமய சவால்களும் போராட்டங்களும் மிகஎளிதில் மறக்கச் செய்யும் மேவிபோசேத்தின் வாழ்க்கைக் கதையானது. நம்முடைய பலவீனத்திலும் பாவத்திலும் தேவன் நம்மை வந்தடைந்ததையும், எவ்வாறு நம்மை தம்முடைய குமார குமாரத்திகளாகவும் ஆக்கினார் என்பதையும் நினைவூட்டுகிறது.

தேவனுக்கு ஊழியம் செய்யக்கூடிய வாழ்க்கையும், ஆராதனையின் திருவுகோலாக இருக்கிற நன்றியுள்ள இருதயத்தை போதிக்கிறது.

## 8. ஆசாயனாகிய யோய்தா (2 நாளாகமம் 22 : 10-12 , 23:1-21)

காட்சி :

இராஜாவாயிருந்து அகசியாவின் சகோதரியை யோய்தா விவாகம் பண்ணினான். ( 22:11) அதாவது, முந்தய இராஜாவிற்கு மாமனும், அகசியாவிற்கு முந்தைய இராஜாவாகிய



கொன்றுபோடவும் அப்படிச் செய்தவர்களைச் சூரியனுக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதானத்தில் தூக்கிப்போடும்படி மோசேவுக்கு கட்டளையிட்டார். இஸ்ரவேல் ஜனத்தார் அனைவரும் ஆசாரிப்பு வாசலுக்கு முன்பாக அழுது கொண்டு இருந்தார்கள். அப்பொழுது இஸ்ரவேல் வசம்சத்தின் பிரபுவாயிருந்த சல்லூவின் குமாரன் சிம்ரி, மீதியான் ஜனங்களுடைய தலைவனின் குமாரத்தி கஸ்பியை மோசேயின் கண்களுக்கு முன்பாக அழைத்துக் கொண்டு வந்தான் பினேகாஸ் இதை கண்டபோது, நடுச்சபையிலிருந்து எழுந்து ஒரு ஈட்டியைத் தன் கையிலே பிடித்து, சிம்ரியின் அறைக்கு அவன் பின்னாலே போய், சிம்ரி மற்றும் கஸ்பியின் இருவருடைய வயிற்றிலும் ஈட்டி உருவிப்போக அவர்களைக் குத்திப்போட்டான். அவர்கள் மிகப்பெரிய வம்சத்தை சேர்ந்தவர்களாய் இருந்தும் பினெகாஸ் இப்படிச் செய்தான். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதை நின்று போயிற்று.

சிம்ரியின் பாவத்தின் ஆழம் என்ன? சிம்ரி எதற்காக தண்டிக்கப்பட வேண்டும்.?

சிம்ரி உண்மையான நிலைமையை அறியாதிருந்தான். கர்த்தருடைய கோபம் இஸ்ரவேலர் மீது மூண்டது, வாதையினால் 24000 பேர்கள் ஏற்கனவே மறித்திருக்கிறார்கள். மோசே இஸ்ரவேலின் நியாயதிபதிகளை அழைத்து பேசினான். கூடார வாசலுக்கு முன்பாக ஜனங்கள் அழுது கொண்டு இருந்தார்கள். எனினும், சிம்ரி பாவத்தினால் நிறையப்பட்டு, பாவத்தின் இன்பத்தில் யோசனையாய் இருந்தான். மோசேயின் கண்களுக்கு முன்பாகவே மீதியோன் ஸ்திரீயை அழைத்துச் சென்றான். (இது அவர்கள் அதிகாரத்திற்கு வெளிப்படையான அவமரியாதை)

இதைத்தான் பாடம் நம்மிடத்தில் செய்யும். உங்களை சுற்றியுள்ள உண்மையான நிலைமையை அறியாதபடிக்கு உங்களின் கண்களை மறைக்கும் பாவம் ஏதேனும் உண்டா?

இன்றைய பாவத்தின் கதாநாயகனாக பினெகாசை மாற்றியது எது? பினெகாஸ் தன்னைச் சுற்றியுள்ள நிலைமையை நன்கு அறிந்திருந்தான். தேவன் உணர்ந்ததை அவன் உணர்ந்தான். பினெகாஸைக் குறித்து மோசேவிடம் தேவன் கூறின சாட்சியைப் பாருங்கள். '' நான் என் எரிச்சலில் இஸ்ரவேல் புத்திரரை நீர்முலமாக்காதபடிக்கு பினெகாஸ், என் நிமித்தம் அவர்கள் நடுவில் பக்திவைராக்கியம் காண்பித்ததினால்,இஸ்ரவேல் புத்திரர் மேல் உண்டான என் உக்கிரத்தை திருப்பினேன்." என்றார்.

யாருடைய மரியாதையை குறித்து அக்கறையுள்ளவராயிருக்கிறீர்கள்.? தேவனுடைய மரியாதைக் காட்டிலும் நம்முடைய மரியாதைக்கே அக்கறைக் கொள்கிறோம்.

உங்களுடைய மரியாதைக் குறித்து அக்கறைக்கொண்டால் இவ்வுலக் கண்களுக்கு முன்பாக ஒரு கதாநாயகனைப்போல் இருக்கலாம். ஆனால் தேவனுடைய கண்களுக்கு முன்பாக நாம் பூஜ்ஜியமாகவே இருப்போம்.

தேவனுடைய மரியாதையை அக்கறை கொண்டதால் பினெகாஸ் கதாநாயகனானான். தன்னைக் காட்டிலும் தேவ மரியாதைக்கே பினெகாஸ் சிந்தனையுள்ளவனாய் இருந்தான். இதுவே அவனுக்கு தேவனிடத்தில் ஆசீர்வாதத்தைப் பெற்றுத் தந்தது. பின்பு அவனுக்கும், அவனுடைய சந்ததிக்கும் நித்திய ஆசாரிய

பட்டத்திற்குரிய உடன்படிக்கை உன்டானது.

இன்று நம்முடைய வாழ்வில் நம்மை நாம் கனம் செய்வதைக் காட்டிலும், தேவனுக்கு கனத்தை செலுத்தும்போது இதே வாக்குத்தத்தம் நமக்கும் உண்டாகும்.

**பயன்பாடு:**

எத்தகைய வகையில் தேவனை நினைத்து வைத்திருக்கிறீர்கள்.

தேவ கனமற்ற தம்மை சுற்றியுள்ள நிலைமை அறியாதபடிக்கு உங்களின் கண்களை மறைக்கும் காரியங்கள் யாவை?

நம்மிலும் மேலாக தேவனுக்கு கனம்செய்ய எத்தகைய செயல்முறை முயற்சிகளை எடுக்க வேண்டும்.?

## 3. யாசேல் – நியாயதிபதிகள் 4:17-24

பயங்கர போர் சூழ்ந்த காட்சியை இவ்வசனத்தில் காண்கிறோம். போர்த்தளபதியும், எதிரியுமான சிசெரா போரில் தோற்று ஓடிப்போய், கேனியனான ஏபேரின் மனைவி யாகேலின் கூடாரத்திற்கு வந்தான். இங்கு பாதுகாப்பான இடமும், யாரும் தன்னை சிறைபிடிக்க மாட்டார்கள் என்றும் தனக்குள் எண்ணிக்கொண்டான்.

1. இஸ்ரவேலர்கள் கேனியருடன் சமாதானமாய் இருந்தார்கள். எனினும், எதிரியாகிய யாபினின் போர்ச்சேவகர்களுடன் ஏபேரின் ஜனத்தார் நட்புடன் பழகினார்கள். இஸ்ரவேல் போர்ச் சேவகர்களுடைய இடத்தை கொடுத்தது ஒருவேளை ஏபேரின் ஜனங்களாய் இருக்கலாம். தன் கணவனைப்போல் இல்லாமல் யாகேல் இஸ்ரவேலருக்கு விசுவாசமாய் நடந்தாள். இதினிமித்தம் எல்லாவற்றையும் இரகசியமாய் தனக்குள் வைத்திருந்தாள்.

யாகேலின் விசுவாசத்தை சந்தேகிக்க சிசெராவுக்கு எந்த காரணமும் இல்லை. சிசெரா தன் பாதுகாவலர்களையும் இழந்ததால் விசுவாசமுள்ளவனின் மனைவியாகிய யாகேலின் இருப்பிடம் அவனுக்கு பயத்தை கொடுக்கவில்லை. போர் முடிந்து களைப்படைந்து, தன்னை காப்பாற்றிக் கொள்ள ஓடிவந்து தான் நம்பிய ஒருவரோடு இருக்கும்போது எந்த தீங்கும் அண்டாதுஎன எண்ணினான்.

யஸகேல், கடமையுணர்வும் உபசரிப்பும், மரியாதையும், அக்கறையும் கொண்ட இனிப்பான மனைவியாய் இருந்தாள். எனினும், அவளுடைய தியாக அர்ப்பணிப்பையும், விசுவாசமும், அவளின் கேள்வியற்ற கீழ்ப்படிதலையும் தன்னுடைய ஜனங்கள் வெற்றிபெற தேவனுடைய அற்புதமான திட்டத்தை நடத்தி, தேவன் தன்னை அழைத்து பயன்படுத்தினார் என்பதனையும் விளக்குகிறது. யாகேல் தன்னுடைய பொருப்பை நன்கு உணர்ந்தவளும், அதனைக்குறித்து தெளிவாகவும் இருந்தாள். தன் கடைமையை நிறைவேற்றுவதில் தயங்காமலும், தக்கநேரத்தில் தைரியத்துடனும் திடமாகவும் தன்னை வெளிப்படுத்தினாள். இதுவரை யாகேல் யாரும் அறியாத பெண்ணாய், தன் குடும்பத்திற்கு உதவியும், எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தவராயும் இருந்தாள். இஸ்ரவேலின் வரலாற்றில் முக்கிய நோக்கமாகவும், சிறப்பான பாத்திரத்தோடும் யாகேலை தேவன் ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். தேவன், அவள் இருதயத்தில் நடந்த ஆயத்தம் செய்ததை அவள் ஒருபோதும் முடிப்பதற்கு நிராகரிக்கவில்லை. தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற நமக்கு எந்த ஒரு பதவியோ, பெயரோ தேவையில்லை. தேவனுக்கு பயன்படுத்தும்படி பெலனும் தாளந்துகளும் நம்மிடம் உள்ளது. அக்காலத்தில் பெண்கள்தான் கூடாரத்தை கட்டுவார்கள், யாகேள் கூடாரம் கட்டுவதில் மிகவும் கைதேர்ந்தவள். தேவஜனங்களுக்கு வெற்றியைக் கொண்டுவர தன்னால் எவ்வளவு சிறந்ததை செய்ய முடியுமோ அதனை அறிந்து செய்தாள். ஒரு சிறிய திறமை, ஏற்ற நேரத்தில் சரியான தீர்மானம் செய்ததால் தேவஜனங்களுக்கு முழுமையான வெற்றியைத்



பத்சேபாள் கற்பமுற்றாள் என்கிற செய்தியை தாவீது கேட்டவுடன், தான் மனந்திரும்புவதற்கு இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்தி இருக்கலாம். அதற்குப் பதிலாக மனந்திரும்பாத பாவிகள் எப்படி பாவத்தை மறைக்கிறார்களோ அதைப்போல் பாவத்தை மறைக்க முயற்சித்தான்.

பத்சேபாள் கற்பமடைவதற்குக் காரணமான உரியா இருக்க வேண்டும் என்பதற்காக, தாவீது உரியாவை அவன் வீட்டிற்கு அனுப்பி வைத்தான். அது நடக்காததால், உரியாவை நடக்கிற போரின்போது முன்னிலையில் நிற்கவைத்து அவன் சாகும்படி திட்டமிட்டான்.

நம்முடைய பாவத்தை மூடி மறைப்பது என்பது வஞ்சனையுள்ளது. நம் பாவத்தை நம்முடைய மனசாட்சிக்கு மட்டும் கஷ்டத்தோடு மறைக்கலாம். ஆனால் தேவனுக்கு முன்பாக நம்முடைய பாவத்தை மறைக்க இயலாது. மறைக்கப்படும் நம்முடைய பாவமானது தேவனுக்கும், பிறருக்கும் உள்ள அந்நியோந்நியத்தை தடுப்பதாகவும் ஆன்மீக வாழ்க்கையின் வல்லமைக்கும் தடையாக இருக்கும். 1 யோவான் 1 & 2 வசனங்களை மறந்துவிடுகிறோம். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து, கிருபையோடு நமக்கு உதவுவது மட்டுமல்லாமல் அவற்றை மன்னித்து மறந்தும் விடுகிறார். தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார் என்று நாம் இவற்றின் மூலமாய் மேலும் அவர் மீது நம்பிக்கையாய் இருப்போம்.

மெய்யான கேள்வி நமக்கு என்னவென்றால் " பாவத்தை சந்திக்க தயாராக இருக்கிறீர்களா? பிறருடைய பாவத்தைப் பற்றி பேச அல்ல ; நம்முடைய பாவத்தை சந்திக்க..!

ஸ்பர்ஜான் என்பவரின் இவ்வார்த்தைகள் எனக்கு பிடிக்கும், " நாம் பாவம் செய்தோம் என்பதை உணர்ந்தவுடன் பாவத்தோடு அதன் காரணத்தை சொல்ல தொடங்குவதோ., அல்லது நம்முடைய இருதயத்தை சரியான நிலைக்குக் நாம் கொண்டு வரும்வரை காத்திருப்தோ சரியான செயல் அல்ல, ஆனால் நாம் உடனே சென்று அங்கேயே அப்போதே நம்முடைய பாவத்தை தேவனிடத்தில் அறிக்கையிடவேண்டும்.

<u>பயன்பாடு:</u>

- உங்களுடைய சோதனைகளையும், சமரசத்தை யோசித்து பார்த்து அதனின் விளைவுகளைப் பட்டியலிடுங்கள்.
- உங்களுடைய பாவத்தை மறைக்காமல், அதனை அறிக்கையிடுவதற்கான தைரியத்தை பெறுவதற்கு இன்றே ஜெபியுங்கள்.

## 7. மேவிபோசேத்

தேவன் நம்மிடம் வந்தடைவது எப்படி?

குறிப்பு : (2 சாமு 4 : 4, 2 சாமு 9:1-8, எபேசி 2: 1-6)

தேவன் நம்மை வந்தடைந்து, நம்மை இரட்சிக்கிறார் என்பதற்கு மேவிபாசேத்தின் வாழ்க்கை ஒரு மிகப்பெரிய நினைவாக இருக்கிறது. நாம் பாவத்தில் விழுந்து அதனுடைய பாதிப்பினால் முற்றிலும் உதவியற்றவர்களாய் இருப்பதை இது நினைவு கூறுகிறது. தேவனுடைய பகைஞர்களாய் அவருடைய கோபாக்கினைக்கு தகுதிபெற்ற நம்மை அவருடைய அதிசயிக்கும் அன்பினாலும், பெருந்தன்மையினாலும் நம்மை வந்தடைந்ததை நினைவூட்டுவதாய் இச்சம்பவம் இருக்கிறது. தேவனுடைய அன்பையும், நன்மைகளையும் நாம் மறப்பது மிகவும் சுலபம். அதிலும் நம்முடைய கடினமான நேரத்தில் தேவனுடன் நேரத்தை செலவழிப்பதையும் தவிர்க்கிறோம்.

இச்சம்பவத்தின் மூலம் தேவன் நமக்கு செய்ததை மீண்டும் நினைவுகூற

பெற்றுக் கொள்ளுங்கள்.
வேத வசனத்தின் மூலம் தேவனிடத்தில் நல்ல நேரத்தை செலவு செய்து அவரை இன்னும் ஆழமாய் அறிந்து கொள்ளுங்கள்.

### 6. உரியா – பத்சேபாளின் கணவன் (2 சாமுவேல் 11)

தகுதியின்மை, வேசித்தனம் மற்றும் பல குற்றங்களை மூடிமறைக்க வரலாற்று முழுவதிலும் பலமுறை எவ்வளவோ முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. வேதத்தில் மூடிமறைக்கும் முயற்சிகள் தொடக்கத்திலேயே இருந்தது. ஆதாம், ஏவாள் தங்களுடைய நிர்வாணத்தை தேவனிடத்திலிருந்து மறைக்கவும், அவர்களின் முயற்சிகள் தங்களின் பாவத்தையும், குற்றவுணர்ச்சியையும் காட்டிக்கொடுத்தது என்று உணராமல் இருந்தனர். 2 சாமுவேல் 11– ல் மிகப்பெரிய குற்றத்தை மூடி மறைக்கும் முயற்சி மற்றவைகளைப்போல அதுவும் பரிதாபத்தோடு தோல்வியுற்றது.

தாவீதும், உரியாவும் பத்சேபாளும் ஒருவருக்கொருவர் தெரியாதவர்களல்ல, அனைவரும் ஓரளவு தங்களை அறிந்தவர்களாயிருந்தனர். தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவனான எலியாமின் குமாரத்தி பத்சேபாள், (2 சாமுவேல் 23:34) அகித்தோப்பலின் பேத்தியுமாவாள்.

உரியா, தாவீது பாராக்கிரமசாலிகளின் பட்டியலில் இடம் பெற்றிருந்தான். ( 2சாமுவேல் 23 : 39) ( 1 நாளாகமம் 11:41) அதுல்லாம் என்னும் கெபியில் தங்கியிருந்து தாவீதைச் சந்திக்க அவனுடைய பராக்கிரமசாலிகளில் வந்தார்கள். (1 சாமுவேல் 22:1-2) அவர்களில் யோவாப், அபிசாய் மற்றும் அசகேல் ஆகிய மூன்று சகோதரர்களும் பராக்கிரமசாலிகளாய் இருந்தார்கள். (2 சாமுவேல் 23:18-24, 1 நாளாகமம் 11: 26) மற்றவர்கள் தாவீதோடு சிக்லாக்கில் சேர்ந்து கொண்டார்கள் (2 நாளாகமம் 12 : 1) இன்னும் பல யுத்தமனுர்கள் எப்ரோனில் தாவீதோடு சேர்ந்து கொண்டார்கள். (1 நாளாகமம் 12;38 - 40) உரியா, தாவீதோடு எங்கு எப்போது சேர்ந்தான் என நமக்கு தெரியாது. எனினும் இருவரும் ஒருவரையொருவர் போரிடும்போதும், சவுலிடமிருந்து தப்பிச்செல்லும் போதும் அறிந்திருக்லாம் என கருதுகிறோம்.

தாவீது தான் செய்வது தவறுயென்று அறிந்தும் அதனை செய்தான். சந்தேகத்தை ஏற்படுத்தும் சாத்தானின் வார்த்தைக்கு செவிசாய்த்தும், நாம் செய்யும் பாவம் வேறுயாரையும் பாதிக்காது என்பதையும் அநேகதரம் நாம் நம்புகிறோம். ஆனாலும் நம் பாவம் பிறரை கண்டிப்பாக பாதிக்கிறது. தாவீது, இதனை முன்னமே நினைத்திருந்தால், தான் நினைத்ததைக் காட்டிலும் மிகப்பெரிய பாதிப்பை காண்பேன் என நினைத்திருந்தாலோ, பாவத்தின் இச்சையானது நேரடியாகவோ அல்லது எதிர்மறையாகவோ கொடுத்த முடிவானது என்னவென்றால்

- தேவையற்ற கற்பந்தறிப்பு
- நம்பிக்கையான நண்பனின் கொலை
- மறித்த குழந்தை
- தன் மகள், தன் மகனாலேயே கற்பழிக்கபட்டது.
- ஒரு குமாரனால் ஏற்பட்ட தேசப்போர்
- தாவீதின் சுயக்கட்டுப்பாடு அற்ற நடக்கையைப் பின்பற்றும் குமாரனால், இஸ்ரவேல் தேவனை விட்டு விலகி செல்லும் வழி நடத்தல்.

<u>கேள்வி :</u> நம்முடைய எத்தகைய பாவமாக இருந்தாலும், எத்தகைய சமரசத்தில் ஈடுப்பட்டிருந்தாலும் இவைகள் மிகக் கொடூரமான பாதிப்புகளை பின்னர் ஏற்படுத்தும் என்று தெளிவாக புரிந்துகொள்கிறீர்களா?



தர முடிந்தது. வேறொருவர் தன்னிடம் வந்து அதனைச் செய்ய சொல்ல வேண்டுமென்று எதிர்ப்பார்க்கவில்லை. பாராக் என்பவர் வந்து இக்காரியத்தை செய்ய வேண்டும் என்று யாகேல் தாமதிக்கவில்லை. கிடைத்த சந்தர்ப்பத்தை சிறப்பான யுக்தியுடன் பயன்படுத்திக் கொண்டாள்.

<u>நியாயாதிபதிகள் 5:24-27</u>

தேவனை கனம்பண்ணும் தெபோராளின் பாடலில் “ தேவனுடைய அழைப்பிற்கு செவிசாய்த்து கீழ்ப்படிந்த யாகேல் ஆசீர்வதிக்கப்பட்டவள் ” என்றாள். தேவனுக்காக எழுந்துநிற்க, யாகேலைப்போல் உங்கள் குடும்பத்தில் நீங்கள் ஒருவர்தான் இருந்தீர்களென்றால், முன்வருவீர்களா? அல்லது பயத்தினிமித்தம் முன்வராமல் கூட்டத்தில் ஒருவராய் இருப்பீர்களா?

உங்களுக்கு நெருக்கமானவர்களில், ஒருவேளை கணவனோ, மனைவியோ, உடன்பிறந்தவர்களோ நெருங்கிய நண்பரோ அல்லது உங்களின் வழிநடத்துனரோ ஆன்மீகமில்லாத நிலையில் முடிவெடுக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறதா? அதற்கு நீங்கள் என்ன பதிலளித்தீர்கள்? எழுந்து நிற்க விரும்பினீர்காளா? இல்லையெனில் அதற்கு என்ன காரணம்.

வழக்கத்திற்குமாறான காரியத்தை நிறைவேற்ற தேவன் அழைத்தால் நீங்கள் குழப்பமடைவீர்களா? அல்லது சந்தேகப்படுவீர்களா? ஏதாவது ஆபத்தான, விபரீதமான உங்கள் சவுகரியத்திற்கு அப்பாற்பட்டு , உங்களின் திறமைக்கும் அப்பாற்பட்ட காரியமாகயிருந்தால் உங்கள் பதில் என்ன? கீழ்ப்படிவீர்களா அல்லது தேவனுடைய ஞானத்தைக் கேள்வி கேட்பீர்களா? சந்தர்ப்பத்தை உடனடியாக பயன்படுத்திக் கொள்வீர்களா? அல்லது வேறொருவர் முன்வந்து பொறுப்பெடுக்க காத்திருந்து, நீங்கள் பாதுகாப்பாக இருக்க நினைப்பீர்களா? தேவனை கனம் செய்ய உங்கள் திறமையை பயன்படுத்துவீர்களா? சாதாரணமான பெண்ணாகிய யாகேல் சாதுர்யமான காரியத்தை செய்தாள். அவள் ஆசிர்வதிக்கப்பட்டவளாக அழைக்கப்பட்டாள். ஜெயம் தேவனை சார்ந்திருக்க, தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொள்ள எந்நேரத்திலும், எவ்விடத்திலும் எப்படியாகிலும் நம்மை ஆயத்தப்படுத்த வேண்டும்.

### 4. போவாஸ் – 1 தீமோத்தேயு 5:2

முதிர்வயதுள்ள ஸ்திரீகளைத் தாய்களைப் போலவும், பாலிய ஸ்திரீகளை எல்லாக் கற்புடன் சகோதரிகளைப் போலவும் பாவித்து புத்தி சொல்லு.
இவ்வசனம் எழுதுவதற்கு முன்னமே போவாஸ் இதன்படி வாழ்ந்திருந்தான். நகோமியை தன்னுடைய தாயாகவும், ரூத்தை கற்புடனும் நடத்தினான். வெளிப்படையான பெண்கள் கூட நம்பும் அளவிற்கு போவாஸ் இருந்தான். பாதுகாப்பற்ற நிலைமையிலுள்ளவர்களை பயன்படுத்திக் கொள்ளும் உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் போவாஸ் அதற்கும் மேலாக அதிக கனத்துடனும், மரியாதையுடனும் பிறரை நடத்தினான்.

**1. போவாஸ்** <u>– சமநிலை கொண்ட பாத்திரவான்</u>

நம்முடைய மகளுக்கு திருமணம் செய்துகொடுக்க விரும்புமளவும், நம்முடைய மருமகன்களுக்கு மாதிரியாக பின்பற்ற ஏற்ற மனிதனாய் போவாஸ் வாழ்ந்தான்.

ரூத் 2:8-9 போவாஸ் ரூத்தை பற்றி கேட்டறிந்து, கடின உழைப்புடைய பெண் என்பதையும், தன்னுடைய மாமியாரிடம் சார்ந்திருக்கும் பெண் என்றும் அறிந்து, ரூத் பயந்திருப்பாள் என்பதையும் உணர்ந்து, அவளிடம் எளிமையோடும், அன்போடும் “

மகளே! என்றான். இந்நிலைமையில் தன்னுடைய உறவுமுறையின் எல்லையை ஸ்தாபித்தான்.

போவாஸ் தன்னுடைய சொற்களால்...ரூத்திற்கு பாதுகாப்புடன் அங்கு தங்கி, பெண்களோடு வேலை செய்யவும் அனுமதித்தான். மற்ற ஆண்களிடமிருந்து பாதுகாத்து, அவர்கள் ஒருவரும் அவளை தொடாதபடிக்கு கட்டளையிட்டான்.

மரியாதை – அவளுக்கு தாகம் எடுத்தால், என்ன செய்ய வேண்டும் என்று குறிப்பிட்ட சில வழிமுறைகளையும் கொடுத்தான்.

<u>ரூத் 2:22-23</u> தன் பொறுப்புகளை கனம் செய்யும் போவாஸ், நற்சாட்சி பெற்ற மனுன் என்று நகோமி உணர்ந்தாள். நன்றியுள்ள இருதயத்தை வெளிப்படுத்தி போவாஸின் வேலைகாரிகளோடே போகிறது நல்லது என்று போவாஸின் ஆலோசனையை பின்பற்றவும் ரூத்தை கேட்டுக்கொண்டாள்.

**<u>பிரதிபலிப்பு:</u>** போவாஸின் இருதயத்தையும், ஆவியையும் பின்பற்ற நான் என்ன செய்ய வேண்டும்?

<u>2. போவாஸ் – அவனுடைய வாழ்க்கையும், கோட்பாடும் இணைந்திருந்தது.</u>

<u>ரூத் 3:7-13</u> இராத்திரியிலே, போவாஸ் தன் பாதத்தண்டையிலே ரூத் படுத்திருக்கிறதை அறிகிறான். வாலிபர்கள் பின் போகாததாலும், ரூத் நற்குணசாலி என்று கூறி அவளை பாராட்டுகிறான். தன் பேச்சிலும் அவளோடு எல்லைதாண்டாமல் இருந்தான். போவாசைக் குறித்து இவைகள் கூறுவது என்ன? தன்னுடைய மனவுறுதியில் தொடர்ந்து திடமாய் இருந்தான். தன்னுடைய சூழ்நிலையை பயன்படுத்தி முடிவெடுக்கவில்லை, அல்லது அதனை சமரசம் செய்து காரணமாக பயன்படுத்தவுமில்லை. நகோமியும் ரூத்தும் பொறுமையாய் இருப்பதை அறிந்து ஆறுபடி வாற்கோதுமை கொடுத்து ஆசீர்வதித்தான்.

போவாஸின் நீதியானது, விதவைகளை அக்கறைக் கொள்ளும் தேவனிடத்தில் விசுவாசத்தை பலப்படுத்த அவர்களுக்கு உதவியாயிருந்தது.

<u>ரூத் 4:13-16</u>

இப்புத்தகத்தின் துவக்கத்தில் நகோமி தனித்து விடப்பட்டவளாய் இருந்தாள். முடிவில் நகோமி தன்னுடைய கையில் ஒரு குழந்தையுடன் இருக்கிறாள். அங்கிருந்த ஸ்திரீகள், போவாஸையும் பிறந்த குழந்தையாகிய ஓபேத்தையும் கண்டு தேவனைத் துதித்தார்கள். இது ஒரு சாதாரணமான குழந்தை கிடையாது. ஓபேத் மூலமாய் கர்த்த இயேசு இவ்வுலகத்திற்கு வந்ததைக் காண்கிறோம்.

## 5. அன்னாள்

அன்னாளுடைய வாழ்க்கையானது நியாயதிபதிகள் அரசாண்ட காலத்தில் நிகழ்ந்தவை. அந்நாட்களிலே அவனவன் தன்தன் பார்வைக்கு எது சரியோ அதை செய்து வந்தார்கள். (நியாயாதிபதிகள் 21:25) ஒவ்வொரு வருமும் லேவியானாகிய எல்க்கானாவும் (1நாளா 6:27) அவனுடைய குடும்பத்தாரும், ராமதாயீமிலிருந்து, தேசத்தின் ஆன்மீக இடமாகிய சீலோவுக்கு சென்று தேவனைப் பணிந்து கொள்ளவும் அவருக்கு பலியிடவும் பயணம்செல்வார்கள். எல்க்கானாவின் இருமனைவிகளில் அன்னாளுக்கு பிள்ளைகள் இல்லாமல் இருந்தது.

இன்னொரு மனைவியாகிய பெனின்னாள், அன்னாள் துக்கப்படும்படி அநேக வருஷங்களாக அவளை விசனப்படுத்துவாள். அப்பொழுது அவள் சாப்பிடாமல் அழுது



கொண்டிருப்பாள்.

எனினும், பிறர் நம்மை காயப்படுத்துவதை தடுக்கமுடியாவிட்டாலும் அவர்கள் காயப்படுத்தும்போது எத்தகைய மறுசெயல் புரிகிறோம் என்பதை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். கர்த்தர் அன்னாளின் கர்ப்பத்தை அடைத்திருந்தாலும் (1:5) அவளின் இருதயம் தேவனிடத்தில் திறந்ததாய் இருந்தது. 1 சாமுவேல் 1:10 யில் அன்னாள் மனங்கசந்து மிகவும் அழுது, தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணினாள். ஆனால் ஆசாரியனோ அன்னாளை தவறாக புரிந்துகொண்டார்கள். வசனம் 13 – ல் அன்னாள் தன் இருதயத்திலே பேசினாள். அவளின் உதடுகள் மட்டும் அசைந்தது. ஆனால் சத்தமோ கேட்கப்படவில்லை. அவள் குடித்திருக்கிறாள் என்று ஏலி நினைத்தான். அன்னாள் மனச்சோர்வடையவும், கசப்புணர்வு ஏற்படவும் எல்லா காரணங்களும் இருந்தும், நம்பிக்கையை மட்டும் விட்டுக்கொடுக்காமல் ஜெபம் செய்து கொண்டே இருந்தாள். தன்னுடைய பிரச்சனைகளை உண்மையோடும், நம்பிக்கையோடும் தேவனுக்கு முன்பாக கொண்டு சென்றாள். அவளுடைய எண்ணத்தில் முழுமையான மாற்றத்தைக் காண்கிறோம்.

வசனம் 1:18ல் உம்முடைய அடியாளுக்கு உம்முடைய கண்களிலே தயைகிடைக்கக்கடவது என்றாள். பின்பு அவள் புறப்பட்டுப்போய் போஜனம் செய்தாள். அவளுடைய முகம் துக்கமில்லாமல் இருந்தது.

இத்தனை வருஷங்களாக எவ்வித பலனும் கிடைக்காமல் இன்னும் ஏன் அன்னாள் நம்பிக்கையை விட்டுவிடவில்லை? தேவன் மீது கோபம் கொள்ளாமலும், கசப்புணர்வு ஏற்படாமலும் எப்படி விடாமுயற்சியோடு இருக்க முடியும்.? அன்னாள் ஏன் தன் புருனை குறைகூறாமலும், பெனின்னாலுடன் சண்டை போடாமலும் இருந்தாள்? ஆசாரியனாகிய ஏலியிடம் ஏன் மோசமான எண்ணம் கொள்ளாமல் இருந்தாள்.

தேவன் அவளுடைய இருதயத்தின் விருப்பத்தை ஆசீர்வதித்த பின்னர், அப்பிள்ளையை தேவனிடம் திரும்பக் கொடுத்து, தேவனுடைய சந்நிதியில் ஏலியின் மூலம் அவளுடைய பிள்ளைகள் வளர செய்தது எப்படி? அன்னாளுடைய ஜெபத்தை பார்க்கும்போது இதற்கான பதிலைக் காணமுடியும். தான் ஆராதனை செய்த தேவனை நன்கு புரிந்துகொண்டவளாய் இருந்தாள். அவள் தன் தேவனை தெரிந்தவளாய் இருந்தாள்.

கர்த்தரைப் போலப் பரிசுத்தமுள்ளவர் இல்லை. எங்கள் தேவனைப் போல ஒரு கன்மலையும் இல்லை. (வச 2:2)
கர்த்தர் கொல்லுகிறவரும், உயிர்ப்பிக்கிறவருமாயிருக்கிறார். (வச 2:3)
அவர் தாழ்த்துகிறவரும், உயர்த்துகிறவருமானவர். (வச 2:7)
பூமியின் அஸ்திபாரங்கள் கர்த்தருடையவைகள் (வச 2:8)
அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார் (வச 2:9)
கர்த்தர் பூமியின் கடையாந்திரங்களை நியாயந்தீர்க்கிறவர் (வச 2:10)
ஏலியின் குமாரர்கள் இருவரும் பொல்லாதவர்களாய் இருப்பினும், சாமுவேல் பெரியவனாக வளர்ந்து கர்த்தருக்கும், மனுருக்கும் பிரியமாக நடந்து கொண்டான் (வச 2:26)
பின்பு, சாமுவேல் மிகச் சிறந்த நியாயாதிபதியாயும், தீர்க்கதரிசியாயும் ஆசாரியனாகவும் வளர்ந்தான்.

<u>பயன்பாடு:</u>

எந்த காரியங்களில் ஜெபிப்பதை நிறுத்திவிட்டு நம்பிக்கையை தொலைத்திருக்கிறீர்களோ, மீண்டுமாய் திட மனதாயிருந்து, ஜெபித்து விசுவாசத்தை